சுருக்கம்

பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2009–10 ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை (Bonus and Ex-gratia) 2010–11 ஆம் நிதி ஆண்டில் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நிதி (பொ.மா.க) துறை

**அரசாணை (நிலை) எண்.373** **நாள்: 24.09.2010**

புரட்டாசி 8,
திருவள்ளுவர் ஆண்டு 2041

**ஆணை:**

பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2009–10 ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத் தொகையினை 2010–11 ஆம் நிதி ஆண்டில் 30.09.2010–க்குள் வழங்கினால்தான் இந்நிறுவனங்கள் வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்யும்போது, வருமான வரி சட்டங்களின் கீழ் இவற்றை அனுமதிக்கப்பட்ட செலவினமாக கருத இயலும் என்பதால், கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க அரசு ஆணையிடுகிறது:-

அ) ரூ. 9300–34800 என்ற ஊதிய தொகுப்பில் (Pay Band) ரூ. 4300/– தர ஊதியம் (Grade Pay) மற்றும் அதற்கு கீழுள்ள தர ஊதியம் பெறும் (பழைய ஊதிய விகிதம் ரூ.5300–150–8300 மற்றும் அதற்கு கீழுள்ள ஊதிய விகிதம்) அனைத்து பொதுத்துறை நிறுவன தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, அதாவது ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, அவர்களது தகுதியை கணக்கில் கொள்ளாது, குறைந்தபட்ச 8.33 % போனஸ் தொகையும், 1.67 % கருணைத் தொகையும் 30.09.2010–க்குள் வழங்கவும், அவ்வாறு செலவிடப்பட்ட தொகையினை வருமான வரிச் சட்டத்தின்கீழ் தகுதியுள்ள செலவினமாக எடுத்துக் கொள்ளவும், 2009–10 ஆம் ஆண்டில்

போனஸ் தொகை கணக்கிடுவதற்காக ரூ. 3,500/– என்ற ஊதிய உச்சவரம்பை கணக்கில் கொண்டும், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ரூ. 10000/– என்ற சம்பள வரையறையை தளர்த்தியும் போனஸ் வழங்கலாம்.

ஆ) எந்தெந்த பொதுத்துறை நிறுவனங்களில் போனஸ் சட்டத்தின்படி ஒதுக்கீடு செய்யக்கூடிய உபரித்தொகை (Allocable Surplus) போதுமானதாக இருந்து, அவை போனஸ் சட்டத்தின்படி குறைந்தபட்ச போனஸ் தொகையான 8.33%-க்கு அதிகமாக வழங்கும் நிலையில் உள்ளதோ, அந்தந்த பொதுத்துறை நிறுவனங்கள், ஒதுக்கீடு செய்யக்கூடிய உபரித்தொகைக்கு (Allocable Surplus) ஏற்ப, போனஸ் சட்டத்தின்படி, ரூ. 3,500/– என்ற ஊதிய உச்சவரம்பை கணக்கில் கொண்டு, போனஸ் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ரூ. 10000/– என்ற சம்பள வரையறையை தளர்த்தி, 20 % வரை அதிகபட்ச போனஸ் வருமானவரி சட்டத்தின்கீழ் தகுதியுள்ள ஒரு செலவினமாக எடுத்துக் கொள்ள ஏதுவாக 30.09.2010 தேதிக்குள் வழங்கலாம். ஒதுக்கீடு செய்யக்கூடிய உபரித்தொகையின் (Allocable Surplus) அடிப்படையில் வழங்க வேண்டிய போனஸ் 10 % க்கு குறைவாக இருப்பின், போனஸ் மற்றும் கருணைத் தொகை ஆகிய இரண்டும் சேர்த்து மொத்தம் 10% க்கு மிகாமல் வழங்கலாம்.

இ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள உச்சவரம்பிற்குள் உள்ள தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களை பொறுத்தவரையில், 2009–10 ஆம் ஆண்டில் பகுதி காலத்தில் பணியாற்றியவர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகையை அதற்கேற்ப விகிதாசார அடிப்படையில் குறைத்து வழங்கலாம்.

ஈ) மாநில போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம், தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் மற்றும் அரசு ரப்பர் கழகம் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களுக்கு, தலைமைச் செயலகத்திலுள்ள சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகள் வாயிலாக உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

உ) போனஸ் சட்டத்தின் கீழ் வராத 'ஏ' மற்றும் 'பி' பிரிவு அலுவலர்களைப் பொறுத்த வரையில், 2011 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளின்போது அரசு ஊழியர்களுக்கு சிறப்பு மிகை ஊதியம் / கருணைத் தொகை ஏதேனும் வழங்கப்பட்டால் இவர்களுக்கும் இது குறித்து தக்க ஆணைகள் தனியாக வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. சண்முகம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து மாநில பொதுத்துறை நிறுவனங்களின் முதன்மை நிர்வாக அலுவலர்கள்

நகல்
அனைத்து அரசு செயலர்கள்,
அனைத்து தலைமைச் செயலக துறைகள் (சட்டம் மற்றும் சட்டப் பேரவை துறைகள் நீங்கலாக) சென்னை–9.
தலைமைக் கணக்காயர், சென்னை 6/18.
அனைத்து நிறுவனங்களின் நிதித்துறை சார்ந்த இயக்குநர்கள்

// ஆணைப்படி :: அனுப்பப்படுகிறது//

24/9/2010
இணை இயக்குநர்

24.9.2010